# பத்திரிக்கைச்செய்தி

குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள்துறையின்கீழ், திருப்பூர் மாவட்டத்தில் செயல்பட்டுவரும் இளம்சிறார் நீதிக்குழுமத்திற்கு கூடுதலாக பணியாற்றிட ஒப்பந்த அடிப்படையில் கூடுதல் பணியிடமாக இளநிலை உதவியாளருடன் கூடிய பதிவேடு எழுத்தர் (Junior Assistant Cum Record Clerk ) மற்றும் அலுவலக உதவியாளர் (Office Assistant) பணிடத்திற்கு முற்றிலும் தற்காலிகமாக மாத தொகுப்பூதியத்தில் நிரப்பப்பட உள்ளதால் தகுதியுள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| வ. எண் | பதவி | பணியிடங்களின் எண்ணிக்கை | கல்வித்தகுதி, அனுபவம் மற்றும் வயது வரம்பு | மாதச் சம்பளம் |
|---|---|---|---|---|
| 1. | கூடுதல் பணியிடமாக இளநிலை உதவியாளருடன் கூடிய பதிவேடு எழுத்தர் (Junior Assistant Cum Record Clerk) | 1 | Must have passed the SSLC (Class 10) public examination or its equivalent recognized by a State or Central Board. Proficiency in Computer. Age Limit not exceed 42 yearsAge Limit: Not Exceeding 42 years. | ரூ.20,000/- (தொகுப்பூதியம்) |
| 2. | அலுவலக உதவியாளர் (Office Assistant) | 1 | Must have passed the VIII (Class 8) from any recognized State or Private School Board. Age Limit: Not Exceeding 42 years. | ரூ.13,000/- (தொகுப்பூதியம்) |

மேற்கண்டுள்ள பணியிடங்கள் மிஷன் வாத்சல்யா வழிகாட்டுதலின்படி, தொகுப்பூதிய அடிப்படையிலான தற்காலிக பணியிடமாகும்.

மேற்கண்ட பணியிடத்திற்கு பணியமர்த்தப்படும் பணியாளர் நிர்வாக காரணங்களுக்காக எவ்வித முன்னறிவிப்புமின்றி பணிநீக்கம் செய்திட நிர்வாகத்திற்கு அதிகாரம் உள்ளது.

மேற்காணும் பணியிடத்திலிருந்து பணிநீக்கம் செய்யப்படும் பட்சத்தில் அப்பணிக்கான எவ்வித உரிமை கோர இயலாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்கண்டுள்ள பணியிடங்களுக்கு தங்களது பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள், சுய சான்றொப்பமிட்ட அனைத்து கல்வித்தகுதிக்கான சான்றிதழ் நகல்கள் மற்றும் புகைப்படத்துடன் 26-10-2026ஆம் தேதி மாலை 5.45 மணிக்குள் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, அறை எண்: 705, 7வது தளம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருப்பூர் என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ மேற்குறிப்பிட்டுள்ள முகவரிக்கு வந்து சேரும் வகையில் அனுப்பப்பட வேண்டும். முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் யாவும் முன் தகவலின்றி நிராகரிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது. மேலும் விவரங்கள் தேவைப்படின் தொலைபேசி எண்.0421 - 2971198-க்கு தொடர்பு கொள்ளவும்.

மேலும் பணியிட விவரம் மற்றும் விண்ணப்ப படிவத்தினை https://tiruppur.nic.in என்ற திருப்பூர் மாவட்ட தேசிய தகவல் மைய இணையதள முகவரியில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

Manish Narnaware I.A.S

District Collector

Tiruppur District